டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் வெல்லர்ஸ்

agridoctor.in | 22.11.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 130 | Madurai | Online Edition

தமிழகத்தில் 18 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, நவ.21

தமிழகத்தில் வரும் நவம்பர் 23ம் தேதி முதல் 4 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளது.

நாளை 23ஆம் தேதி சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

அதேபோல், 24ஆம் தேதி நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், கள்ளக்குறிச்சி, நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தேனி, தென்காசி மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



கறம்பக்குடி வட்டார பிலாவிடுதி கிராமத்தில் கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி



புதுக்கோட்டை, நவ.21

புதுக்கோட்டை மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் மூலமாக 2026-27 ஆம் ஆண்டிற்கான கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி கறம்பக்குடி வட்டார பிலாவிடுதி கிராமத்தில் நடைபெற்றது. இந்த பயிற்சியினை வேளாண்மை உதவி இயக்குநர் கருணாமூர்த்தி துவக்கி வைத்து உயிர் உரங்களின் பயன்பாடு, நுண்ணூட்ட சத்துக்களின் முக்கியத்துவம், தரமான விதை உற்பத்தி செய்வதற்கான தொழில் நுட்பங்கள் பற்றியும் விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

கறம்பக்குடி வட்டார வேளாண்மை அலுவலர் க.நஷ்ரின் நிலோபர் நிஷா, நன்மை செய்யும் பூச்சிகள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகளை எவ்வாறு கண்டறிவது மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள், நுண்ணீர் பாசனத்தின் முக்கியத்துவம் மத்திய அரசு திட்டத்தில் வழங்கப்படும் மானியம், விவசாயிகளுக்கான தனி அடையாள எண், பயிர் விளைச்சல் போட்டி குறித்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கருத்துகளை வழங்கினார்.

உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ந.சண்முகி, எல்.நினோ தாக்கம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, சம்பா பருவத்தில் நெல்லில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள், பிரதம மந்திரி கௌரவ நிதியுதவி தொகை, மின்னனு பயிர் சாகுபடி கணக்கெடுப்பு பணி குறித்து விரிவுரையாற்றினார். உழவர் மன்ற அமைப்பாளர் சி. ரெங்கசாமி, அங்கக வேளாண்மை சாகுபடி குறித்த அனுபவங்களை பகிர்ந்துக் கொண்டார். இந்த பயிற்சியின் முடிவில் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் குறித்த துண்டு பிரசுரங்களை கறம்பக்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கருணாமூர்த்தி, விவசாயிகளுக்கு வழங்கினார். இப்பயிற்சியின் இறுதியில் வேளாண்மை அலுவலர் (உழவர் பயிற்சி நிலையம்) ந.சண்முகி நன்றியுரை கூறினார். இப்பயிற்சிக்கான முன்னேற்பாடுகளை அட்மா திட்ட பணியாளர் க.வீரமணி செய்திருந்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தென்னையில் மீன் அமிலம் மூலம் வேர்வழி ஊட்டமளித்தல் குறித்து வேளாண் மாணவிகள் செயல்விளக்கம்



பெரம்பலூர், நவ.21 பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், சிறுவயலூர் கிராமத்தில் திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவிகள் வ.அபிதா, செ.தேவதர்ஷினி, ச.தனலெட்சுமி, ச.ஹரிணி, ஜா.செ.ஹெலீனா ஜாண், சே.ஜெயஸ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, வி.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாகக் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, நக்கசேலம் கிராமத்தில் தென்னை மரங்களுக்கு மீன் அமிலம் (Fish Amino Acid – FAA) பயன்படுத்தி வேர்வழி ஊட்டமளிக்கும் முறை குறித்து மாணவிகள் விவசாயிகளுக்குச் செயல்விளக்கம் அளித்தனர். மீன் அமிலத்தின் தயாரிப்பு முறை, அதன் ஊட்டச்சத்து முக்கியத்துவம், தென்னை மரங்களில் வேர்வழியாகப் பயன்படுத்தும் முறை மற்றும் பயன்பாட்டின்போது பின்பற்ற வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் மாணவிகள் விளக்கினர்.

மேலும், மீன் அமிலம் போன்ற இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் உயிரியல் செயல்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் நிலையான தென்னை சாகுபடியை ஊக்குவித்தல் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இச்செயல்விளக்கத்தின் மூலம், தென்னை மரங்களில் வேர்வழி ஊட்டமளிக்கும் முறைகள், இயற்கை இடுபொருட்களின் பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண் நடைமுறைகள் குறித்து விவசாயிகள் அறிந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

கிசான் கோஸ்திஷ் – விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி



சிவகங்கை, நவ.21

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை கீழ் இயங்கி வரும் (அட்மா) (2026-27) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் கிசான் கோஸ்திஷ் – விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி குருந்தனிவாரியேந்தல் கிராமத்தில் நடை பெற்றது. இக்கூட்டத்தில் குருந்தனிவாரியேந்தல் விவசாய பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கு விவசாய பெருமக்கள் விளம்பர பாதகைகள் மூலம் வேளாண் தொழில்நுடட்பங்கள் பற்றி பேரணி நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சிவகங்கை மாவட்ட திட்ட இயக்குநர் (அட்மா) வேளாண்மை இணை இயக்குநர் (பொ) மதுரை சாமி தலைமை வகித்து, கலந்து கொண்டு விவசாயிகளுக்கு வேளாண்மை சார்ந்த திட்டங்களையும், மெத்தைலோ பாக்டீரியா திரவ நுண்ணுயிர் உரம் பயன்படுத்தி விதைநேர்த்தி, நாற்றுக்களின் வேர்களை நனைத்தல் இலைவழி தெளித்தல் (அனைத்து பயிர்களுக்கும்), இலைகளில் 1 சதவீதம் இருக்குமாறு தெளிக்க வேண்டும் (10 மி.லி/லிட்டர் தண்ணீர்) என்றும், அதன் பயன்கள் பற்றியும் மற்றும் நெற் பயிருக்கு மாற்றாக பயறுவகை மற்றும் எண்ணெய் வித்துகள் பயிர் களுக்கு ரூ.1750/- ஏக்கர் சாகுபடி செய்யவும், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் திட்டத்தின் கீழ் கேழ்வரகு 2.5 ஏக்கர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ரூ.4000/- ஹெக்டர் செய்யவும், தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் (மக்காச்சோளம், சிறுதானியம், கேழ்வரகு மற்றும் குதிரைவாலி) விதைகள், உயிர் உரங்கள் வாங்கி பயன்படுத்துவீர் என்றும் விளைநிலம் காப்போம், பயிர் காப்பீடுமற்றும் விவசாய நில உடைமைகளை பதிவேற்றம் செய்தல் போன்ற திட்டங்களை எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தைப்பத்துல் ஆசிபா வேளாண்மைத் துறையில் செயல்படுத்தி கொண்டிருக்கும் திட்டங்கள் பற்றியும், திட்டங்களின் பயன்பாடுகள், வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் வேளாண்மைத் துறையின் மூலம் விநியோகிக்கப்படும் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா,

திரவ பொட்டாஷ் இவைகளை பயன்படுத்தி அனைத்து பயிர்களுக் கும் விதை நேர்த்தி செய்வதன் மூலம் ஏற்படக்கூடிய பயன்பாடுகள் குறித்தும் மற்றும் பிரதம மந்திரி கௌர நிதி திட்டம் போன்ற திட்டங்களை பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார கால்நடை உதவி மருத்துவர் கணேஷ் குமார் வரும் 23.11.26 முதல் 23.12.26 வரை ஆட்டுகொல்லி நோய் தடுப்பூசி திட்டம் (TPR) ஆடுகளுக்கு தடுப்பூசி செலுத்த உள்ளது என்றும் மற்றும் ஆடு மாடுகளுக்கு நோய் பரவும் விதம் தடுப்பு முறைகளை எடுத்து கூறினார்.

இப்பயிற்சியில் குன்றக்குடி, வேளாண் அறியில் நிலையம் முனைவர் அனிதா ஸ்ரீ (முனையியல் துறை) வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற்று கொண்டிருக்கும் பயிற்சி விவரங்கள் பற்றியும் மற்றும் வேளாண் பயிர்கள் மற்றும் தோட்டகலை பயிர்கள் பற்றியும் சாகுபடி தொழில் நுட்பங்களை எடுத்து கூறியும் மற்றும் மதிப்பு கூட்டுதல் தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார்.

உதவி தோட்டகலை அலுவலர் அர்ச்சுணன் தோட்டக்கலை துறையில் உள்ள திட்டங்களான சொட்டுநீர் பாசனம் அமைத்தல், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் பழப்பயிர்கள் மற்றும் காய்கறிகள் பரப்பு விரிவாக்க திட்டம், மாநில தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் மற்றும் பனை மேம்பாட்டு இயக்கம் பற்றியும் மற்றும் காய்கறி மற்றும் பழப்பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங் களை எடுத்து கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் செந்தில், சமச்சீர் உரமிடல் மற்றும் இரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைத்தல் குறித்த தொழில் நுட்பங்களான அனைத்து பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த முறையில் சமச்சீர் உரமிடல் பற்றியும் இயற்கையான முறையில் பயிர்களுக்கு எவ்வாறு உரமிடதல் பற்றியும் பசுந்தாள் உரங்கள் விதை முதல் அறுவடை வரை உள்ள தொழில்நுட்பங்கள் பற்றியும் மற்றும் பசுந்தழை உரங்கள் வயலில் இடுவதால் இயற்கையான முறையில் பயிர் சாகுபடி செய்வதையும், இலைவண்ண அட்டையை பயன்படுத்தி உரம் இடுவதையும், உயிர் உரங்கள் பயன்படுத்து வதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், கரிம உரங்கள் மற்றும் மண்புழு உரங்கள் தயாரிக்கும் முறைகள் மற்றும் பேரூட்டசத்துகள் மற்றும் நுண்ணூட்ட சத்துகள் இயற்கையான முறையில் இடுவதை பற்றியும் எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் விவசாயிகள் பயிற்சிகள் சம்பந்தமான உள் மற்றும் வெளிமாநில, மாவட்ட அளவிலான பட் டறிவு, கண்டுணர்வு பயிற்சிகள் செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல்

தொடர்பாக திட்டங்களை பற்றி விவசாயிகளுக்கு விரிவான முறையில் எடுத்துக் கூறினார். உழவர் செயலி பயன்படுத்தும் முறைகள் பற்றியும் மற்றும் அதில் உள்ள 24 முகப்பு விபரம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். இயற்கை முறையில் விவசாயம் செய்வது மண் வளத்தை பாதுகாத்தல், இயற்கை உர கரைசலான ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடுகள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

மேலும் இக்கூட்டத்தில் விவசாயிகளுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் மிளகாய் நாற்றுகள் மற்றும் தானிய சேமிப்பு பைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மற்றும் நெல் பயிரில் வறட்சி காலங்களில் விதை முளைப்புதிறனை அதிகரிக்க (1 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு) பயன்படுத்தி விதை கடினமாக்குதல் செயல்விளக்கம் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. உதவி தொழில்நுட்ப மேலாளர் காளிஸ்வரி பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சிக்கான ஏற்பாடுகள் செய்தனர்.

விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் தொழில்நுட்ப பயிற்சியளித்த மாணவர்கள்



அக்டோபர் மாதம் முழுவதும், SRM வேளாண் அறிவியல் கல்லூரியின் இறுதியாண்டு யூபுநிசி மாணவர்களான AUGUSTE COMTE'26 குழுவினர், விவசாயிகளுக்குப் பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த செயல்விளக்கங்கள் மற்றும் நேரடி பயிற்சிகளை நடத்தினர். இதில் மூடாக்கு (Mulching), சொட்டுநீர்ப் பாசனம் (Drip Irrigation), துல்லிய வேளாண்மை (Precision Farming), ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM), ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை (IDM), உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள், உயிர் உரங்கள், ஒருங்கிணைந்த பண்ணைய முறை, கலப்புப் பண்ணைய முறை, இயற்கை வேளாண் இடுபொருட்கள் தயாரித்தல் மற்றும் பயன்பாடு, மழைநீர் சேகரிப்பு, இரட்டைப் பயிரிடுதல், பயோ கேஸ் உற்பத்தி, பயோசார் தயாரித்தல், தீவனப் பயிர்கள் சாகுபடி மற்றும் பயிர் சிகிச்சை முறைகள் போன்ற தலைப்புகள் இடம்பெற்றன. இச்செயல்விளக்கங்களின் மூலம் விவசாயிகள் தொழில்நுட்பங்களை நேரடியாகக் கற்றுக்கொண்டு, நடைமுறைப் பயிற்சியில் பங்கேற்று, நிலையான வேளாண் முறைகளைத் தங்கள் பண்ணைகளில் பின்பற்றுவதற்கான அறிவையும் அனுபவத்தையும் பெற்றனர்.

தடை செய்யப்பட்ட களைக்கொல்லி மருந்தினை விவசாயிகளுக்கு விற்பனை செய்தால் நடவடிக்கை

புதுக்கோட்டை, நவ.21

புதுக்கோட்டை மாவட்டத்தில் தடை விதிக்கப்பட்ட களைக் கொல்லியை இருப்பு வைத்திருந்தாலோ, விற்பனை செய்தாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குனர் (பொ) ந.சண்முக ஜெயந்தி எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, பாராகுவாட் டை குளோரைடு என்ற மருந்து நெல், பருத்தி, உருளைக்கிழங்கு, சோளம், தேயிலை, காபி, திராட்சை, ஆப்பிள் மற்றும் ரப்பர் போன்ற பயிர்களின் இடை வரிசைகளில் அல்லது நடவுக்கு முன் களைகளை கட்டுப்படுத்த பரவலாக பயன்படுத்தப்படும் ஒரு பாகுபாடற்ற, விரைவாக செயல்படும் களைக்கொல்லி ஆகும். இது மனிதர்களுக்கு மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்தது. சிறிய அளவில் விழுங் கினாலோ, தோல் அல்லது கண்களில் பட்டாலோ, சுவாசித் தாலோ கடுமையான பாதிப்பு மற்றும் உயிரிழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதன் நச்சுத்தன்மையால் உடல் நல பாதிப்புகள் அதிகமாகும்.

எனவே, இந்தியாவில் பாராகுவாட் டை குளோரைடு என்ற களைக்கொல்லியை ஒன்றிய அரசு தடை செய்துள்ளது. வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம் கடந்த செப்டம்பர் 22ம் தேதி இதற்கான உத்தரவை வெளியிட்டது. பூச்சிக்கொல்லி சட்டம், 1968ன் கீழ், நிபுணர் குழு மற்றும் பதிவு குழுவின் ஆலோசனைக்கு பிறகு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மனிதர்கள் மற்றும் விலங்குகளின் உயிருக்கு ஏற்படும் கடுமையான ஆபத்துகள், அதிக உயிரி குவிப்பு, நீடித்த நச்சுத்தன்மை மற்றும் இதற்கு குறிப்பிட்ட மாற்று மருந்து இல்லாததே முக்கிய காரணங்களாகும். இதற்கு முன்பு வழங்கப்பட்ட பதிவு சான்றிதழ்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதன் உற்பத்தி, இருப்பு அல்லது விற்பனை கண்டறியப்பட்டால், நிறுவனங்கள் மற்றும் விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் தற்சமயம், புதுக்கோட்டை மாவட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட தரக்கட்டுப்பாடு வேளாண்மை உதவி இயக்குனர் தலைமையில், பூச்சிக்கொல்லி மருந்து விற்பனை நிலையங் களில் மேற்கண்டவாறு தடை செய்யப்பட்ட பராகுவாட் டை குளோரைடு களைக்கொல்லி இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என தீவிரமாக திடீராய் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, தடை செய்யப்பட்ட பாராகுவாட் டைகுளோரைடு என்ற களைக்கொல்லி யினை விவசாயிகளுக்கு வினியோகம் செய்யக்கூடாது, மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு : விழிப்புணர்வு கூட்டம்



திண்டுக்கல், நவ.21

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் வட்டம், அட்மா திட்டத்தின் கீழ் பொத்திநாயக்கன்பட்டி கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி ஆலோசனைபடி வேளாண்மையில் செயற்கை நுண்ணறிவு குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு, செயற்கை நுண்ணறிவு மூலம் பயிர்களின் வளர்ச்சியைக் கண்காணித்தல், நோய் மற்றும் பூச்சித் தாக்குதல்களைக் கண்டறிதல், வானிலை முன்னறிவிப்பு, நீர் மேலாண்மை, மண் வளம் மற்றும் விவசாயப் பணிகளை எளிமைப்படுத்துதல் போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்து எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர் சீனிவாசன், விளக்கம் அளித்தார். மேலும், விவசாயிகள் தங்களது அன்றாட வேளாண்மைப் பணிகளில் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தித்திறனை அதிகரிப்பது மற்றும் செலவுகளைக் குறைப்பது குறித்தும் எடுத்து கூறினார். இதனைத் தொடர்ந்து, பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள், ஊரக தோட்டக்கலைப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் வேளாண்மையில் ஆளில்லா வானூர்தி தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர். ஆளில்லா வானூர்தி மூலம் பயிர்களின் நிலையை கண்காணித்தல், வயல்களின் பரப்பளவை மதிப்பீடு செய்தல், பயிர்களின் வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறிதல் மற்றும் வேளாண் பணிகளைத் துல்லியமாக மேற்கொள்ளுதல் போன்ற அதன் பயன்பாடுகளை எடுத்து கூறினர்.

இக்கூட்டம் விவசாயிகளிடையே நவீன வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், பாரம்பரிய வேளாண்மையிலிருந்து தொழில்நுட்பம் சார்ந்த வேளாண்மைக்கு மாறுவதன் அவசியத்தையும் வலியுறுத்தியது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் நவீன தொழில்நுட்பங்களைப் பற்றிய அறிவைப் பெற்றதுடன், விவசாயிகளிடம் தங்களது தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்ளும் அனுபவத்தையும் பெற்றனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்பம் மேலாளர்கள் பொன் தமிழரசு அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

நரியம்பட்டி கிராமத்தில் வேளாண் கல்லூரி மாணவிகளின் ஊரக மதிப்பீட்டுப் பணி



மதுரை, நவ.21

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி வட்டாரத்தில் உள்ள விக்கிரமங்கலம் பகுதியின் நரியம்பட்டி கிராமத்தில் மதுரை வேளாண் கல்லூரி மாணவிகள், கிராமப்புற வேளாண் களப் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக பங்கேற்பு ஊரக மதிப்பீட்டுப் பணியை (PRA) நிகழ்த்தினர். கிராமத்தின் சமூக, பொருளாதார மற்றும் வேளாண் நிலவரங்களை அறிந்து, மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை அறிந்து கொள்ளும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. கிராம மக்களின் நேரடிப் பங்கேற்புடன் சமூக வரைபடம், கால வரிசைப் பகுப்பாய்வு, பயிர் பிரமிடு, வள வரைபடம், தாக்கம் வரைபடம், வேளாண் செயல்பாடுகளின் கால அட்டவணை, பருவகால நாட்காட்டி, சிக்கல் மரம், மக்கள் தொகை பகுப்பாய்வு மற்றும் இயக்க வரைபடம் ஆகிய PRA கருவிகள் பயன்படுத்தப் பட்டன. இதன் மூலம் கிராமத்தின் குடிநீர்ப் பிரச்சினை, அடிப்படை வசதிகள், தண்ணீர் பற்றாக்குறை, கூலி உயர்வு, விவசாயப் பணிகள், இயற்கை வளங்கள், வேளாண் நடைமுறைகள், பருவகால மாற்றங்கள், மக்களின் தேவைகள், கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகள் குறித்த தகவல்கள் திரட்டப்பட்டன.

மேலும், கிராம மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவர்களின் காரணங்கள் மற்றும் விளைவுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு கிராமத்தின் தற்போதைய நிலை மற்றும் வளர்ச்சிக் கான தேவைகள் குறித்து புரிதலை மாணவிகள் பெற்றார்கள். அத்துடன், ஊர் மக்களின் அனுபவங்களையும் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு எதிர்கால கிராம வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அடையாளம் காணும் முயற்சியாக இந்நிகழ்ச்சி அமைந்தது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

மேஜிக் அரிசி (MAGIC RICE) பற்றி தெரியுமா?



மேஜிக் அரிசி, INCENT NODULES மாதிரி உடனடியாக அடுப்பில் வேக வைக்காமல் சமைத்து, வெதுவெதுப்பான நீரில் 15- 20 நிமிடங்கள் ஊறவைத்து சமைத்த உணவு சோறு போல இதை உண்ண லாம். அந்த காலத்தில் ராணுவ வீரர்கள் காடுகளில், வனங் களில் சுற்றி திரியும் போது, உணவு தேவைக்கு இந்த அரிசி பயன்பட்டதாக தரவுகள் உள்ளன. இது நார்சத்தும், மாவுசத்தும் நிறைந்த முழுக்க முழுக்க இயற்கையில் விளைவிக்கக்கூடிய அரசியாகும். இதை மற்ற அரிசி போல வேக வைக்காமலேயே, வெதுவெதுப்பான நீரில் ஊற வைத்து சாப்பிடக்கூடியதால் இதற்கு மேஜிக் அரிசி (INCENT RICE) என்று அழைக்கப்படுகிறது.

சிறப்புத் தன்மை

அசாம் மாநிலத்தில் பழங்குடியின மக்களால் விளைவிக்கக் கூடிய, பாரம்பரிய அரிசியாகும். இது கோமல் சவுல் (KOMAL SAUL) அல்லது போகா சவுல் (BOKA SAUL) எனப்படும் சிறப்பு நெல் வகையாகும். பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கில் உள்ள சிவ சாகர் பகுதியில் பயிரிடப்படுகிறது. பொதுவாக மற்ற நெல் பயிரை தாக்க கூடிய கருகல் நோய் மற்றும் தண்டு துளைப் பான் போன்றவைகளை தாங்கி இயற்கை சூழலுக்கு ஏற்ப தகவமைத்து வளரக்கூடியது இதனுடைய தனிசிறப்பாகும்.

இதனுடைய சாகுபடிக்கான வயது 150 நாட்கள் மட்டுமே. மற்ற அரிசியை உற்பத்தி செய்ய ஆகும் செலவு 100 ரூபாய் என்றால் இந்த மேஜிக் அரிசி உற்பத்திக்கான செலவு வெறும் 20 ரூபாய் மட்டுமே.

முக்கிய சிறப்பு தன்மை

1) சமைக்க தேவையில்லை

2) எரிப் பொருள் சேமிப்பு

3) எளிதில் செரியக்கூடிய உடலுக்கு தேவையான குளிர்ச்சி தரக்கூடியது

4) ஊறவைத்த அரிசியுடன் பழங்கள், இனிப்பு, தயிர், பால் கலந்து உண்ணலாம்

5) சாலட் மற்றும் கார உணவுகளுடன் சேர்த்தோ உண்ணலாம்

6) ஆன்லைன் மூலமாக (அமேசான் பிலிப் கார்ட்) மூலமாக வாங்கிடலாம். கிலோ 250-350 வரை விற்பனை செய்யப் படுகிறது.

தற்போது அரிசியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்த நிலையில் தமிழகத்திலுள்ள வேளாண்மை கல்லூரிகள் பரிசோதனை திடல் அமைத்து வருகின்றனர்.

இன்றைய இயந்திரதனமான வாழ்வியல் முறையில் உணவு சமைக்கக்கூட நேரமின்றி, தவிக்கும் மக்களுக்கு இந்த அரிசி ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. ஏன் என்றால் இது READY TO EAT- யாகும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

தேசிய சமையல் எண்ணெய் இயக்கத்தின் (NMEO) கீழ் நிலக்கடலை சாகுபடி மற்றும் மதிப்புக்கூட்டல் குறித்த விவசாயிகள் பயிற்சி முகாம்!

தஞ்சாவூர், நவ.21

அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த ஊரக வேளாண் பணி அனுபவத் திட்ட (RAWE) மாணவர்கள், தேசிய சமையல் எண்ணெய் இயக்கத்தின் (National Mission on Edible Oils) கீழ் நடைபெற்ற நிலக்கடலை மதிப்புக்கூட்டுத் தொகுப்பு செயல் விளக்கத்திடல் விவசாயிகளுக்கான பயிற்சி முகாமில் பங்கேற்றனர்.

இப்பயிற்சி முகாமில் வேளாண்மைத் துறை அலுவலர்கள் மற்றும் பேராசிரியர்கள் விவசாயிகளுக்கு நிலக்கடலை சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளித்ததுடன், விவசாயிகளுடன் கலந்துரையாடலும் மேற்கொண்டனர்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக, வேளாண்மை உதவி இயக்குநர் அப்சரா, வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து, உயிரித் தொழில் நுட்பவியல் உதவிப் பேராசிரியர் டாக்டர் ஆனந்தன், எண்ணெய்-வித்துப் பயிர்களின் சாகுபடியின் முக்கியத்துவம் மற்றும் ஊடு பயிராக எண்ணெய்வித்துப் பயிர்களைப் பயிரிடு வதன் நன்மைகள் குறித்து விளக்கினார். அதனை தொடர்ந்து அய்யம்பெருமாள், தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர், (உழவர் பயிற்சி நிலையம்) சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து, வேளாண்மைப் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார், நிலக்கடலைப் பயிரின் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, உற்பத்தி தொழில் நுட்பங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து விரிவான பயிற்சி அளித்தார். குறிப்பாக, நிலக்கடலை விதைகளை டிரைக்கோ டெர்மா (Trichoderma) போன்ற உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணி களைக் கொண்டு விதை நேர்த்தி செய்வதன் அவசியத்தையும் அதன் நன்மைகளையும் எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் விதை நேர்த்தி செய்வது குறித்த செயல் விளக்கத்தை விவசாயிகளுக்கு வழங்கினர். மேலும், தென்னையில் ஊடுபயிர் சாகுபடி செய்வதன் நன்மைகள் மற்றும் தென்னை டானிக் மூலம் வேர் வழி ஊட்டச்சத்து அளிக்கும் முறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. இம்முறைகள் குறித்த செயல் விளக்கங்களையும் மாணவர்கள் செய்து காட்டினர்.

பின்னர், விதை ஆய்வாளர் நவீன், தரமான விதைகளின் முக்கியத்துவம் மற்றும் விதைச் சான்றளிப்பின் அவசியம் குறித்து எடுத்துரைத்தார். தொடர்ந்து, விதைச் சான்றளிப்பு அலுவலர் சங்கீதா, இயற்கை வேளாண்மைச் சான்றளிப்பு முறைகள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். இப்பயிற்சி முகாமின் மூலம் RAWE மாணவர்கள் நிலக்கடலை சாகுபடி மற்றும் பயிர் மேலாண்மைத் தொழில்நுட்பங்கள், உயிரியல் விதை நேர்த்தி, ஊடு பயிர் சாகுபடி, தென்னையில் வேர்வழி ஊட்டச்சத்து மேலாண்மை, விதைச் சான்றளிப்பு மற்றும் இயற்கை வேளாண்மைச் சான்றளிப்பு ஆகியவற்றில் நடைமுறை அறிவைப் பெற்றனர்.

மேலும், விவசாயிகளுடன் நேரடியாகக் கலந்துரையாடி, நவீன வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்ப்பதற்கான அனுபவத்தையும் பெற்றனர்.

குறுந்தானிய சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியம்

புதுக்கோட்டை, நவ.21

புதுக்கோட்டை மாவட்டத்தில் குறுந்தானிய பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ.8000/- பின்னேற்பு மானியம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது குறித்து புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ந.சண்முக ஜெயந்தி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது,

ஊட்டச்சத்து மிகுந்த வரகு, பனிவரகு, தினை, குதிரைவாலி, சாமை போன்ற குறுந்தானியங்களின் சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நோக்கில் தமிழ்நாடு குறுந்தானிய இயக்கம், புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பாண்டு செயல்படுத்தப்படுகிறது.

குறுந்தானிய பயிர்கள் குறைந்த அளவு நீர்தேவையுள்ள மானாவாரி நிலங்களிலும் சாகுபடி செய்யக்கூடிய பயிர்களாகும். மேலும், வறட்சியை தாங்கி வளரக்கூடிய தன்மை கொண்டவை, பருவ மழையினை சார்ந்துள்ள விவசாயிகள் குறுந்தானி யங்களை சாகுபடி செய்து பயன்பெறலாம்.

குறுந்தானியங்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக ஒரு எக்டருக்கு ரூ.8000 வழங்கப் படுகிறது. உழுதல், களையெடுத்தல், தெளிப்பு பணி, பறவை விரட்டுதல் போன்ற இடைநேர்த்தி செயல்பாடுகளுக்கு ஊக்கத் தொகையாக வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஒரு எக்டர் பரப்பிற்கு மட்டுமே மானியம் வழங்கப்பட வேண்டும்.

பின்னேற்பு மானியம் பெற விரும்பும் ஆர்வமுள்ள விவசாயிகள் உழவன் செயலியில் ஆதார் எண்ணுடன் முன் பதிவு செய்து சிட்டா, அடங்கல் மற்றும் சாகுபடி செய்ததற்கான உரிய புகைப்படத்துடன் வட்டார உதவி வேளாண்மை அலுவலர், உதவு தோட்டக்கலை அலுவலர் அல்லது உதவி வேளாண்மை (வேளாண் வணிகம்) அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் கள ஆய்வு மேற்கொண்டு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும்.

எனவே, விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

நீர் மேலாண்மை மற்றும் தென்னையில் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்!



மதுரை, நவ.21

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் நான்காம் ஆண்டு வேளாண்மை மாணவர்களின் சாணார்பட்டி RAWE குழுவின் சார்பில், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கடந்த 17.11.26 அன்று நீர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் விவசாயத்தில் நீரின் முக்கியத்துவம், கிடைக்கக்கூடிய நீர்வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்துதல், சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் தெளிப்புநீர்ப் பாசனம் போன்ற நவீன நீர்ப்பாசன முறைகள், மழைநீர் சேகரிப்பு, பண்ணைக் குட்டைகள் அமைத்தல் மற்றும் நிலத்தடி நீர்மட்டத்தைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப் பட்டது. மேலும், நீர் வீணாவதைத் தவிர்த்து, குறைந்த நீரைக் கொண்டு அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் எடுத்துரைக் கப்பட்டன.

மேலும், 18.11.26 அன்று தென்னையில் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் தென்னை மரங்களின் சீரான வளர்ச்சி மற்றும் அதிக மகசூலுக்குத் தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள், மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிடுதல், இயற்கை உரங்களின் பயன்பாடு, சமச்சீர் உர மேலாண்மை மற்றும் ஒருங் கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறைகள் குறித்து விவசாயி களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும், தென்னை மரங்களுக்குத் தேவையான உரங்களை உரிய அளவிலும், உரிய பருவத்திலும் வழங்குவதன் முக்கியத்துவம் விளக்கப்பட்டது.

இவ்விரு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மூலம் விவசாயி களிடையே நீர்வளப் பாதுகாப்பு, அறிவியல் பூர்வமான நீர் மேலாண்மை மற்றும் தென்னையில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நிலையான வேளாண்மையை ஊக்குவித்து, விவசாயிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதே நிகழ்ச்சிகளின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் விவசாயிகள் மானியம் பெற வேளாண்மை இணை இயக்குநர் அழைப்பு!

புதுக்கோட்டை, நவ.21

புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறுதானிய சாகுபடியை பரவலாக்க விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திடவும், ஊட்டச்சத்து மிக்க உணவு உற்பத்தினை அதிகரிக்கவும் தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என வேளாண்மை இணை இயக்குநர் ந.சண்முக ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது. அதிக சத்துக்கள் மற்றும் மருத்துவ நன்மைகள் கொண்ட சிறுதானிய உணவு பரவலாக மக்களிடையே பயன்படுத்தப்பட்டு வருவதாலும், இதன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் இவ்வியக்கத்தின் கீழ் கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, சாமை, வரகு, குதிரைவாலி மற்றும் பனிவரகு போன்ற சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியமாக ரூ.1250/- வழங்கப்படும். நடப்பாண்டு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 600 ஏக்கர் இலக்கீடு பெறப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு வழிகாட்டுதலின்படி, விதைகள், திரவ உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரக் கலவை, சூடோமோனஸ் ஆகிய இடுபொருட்கள் மற்றும் அறுவடை மானியம் ஆகியவற்றிற்கு அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூ.1250/- மானியமாக வழங்கப்பட உள்ளது.

ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2.5 ஏக்கர் பரப்பளவிற்கு மட்டுமே மானியம் வழங்கப்படும். ஆர்வமுள்ள விவசாயிகள் உழவன் செயலி (ஷீகுஜுழிஸழிஜ புஸ்ரீஸ்ரீ) மூலம் பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும். உரிய ஆவணங்களுடன் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்து திட்ட மானியத்தை பெற்று பயன் பெறுமாறு வேளாண்மை இணை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

நவீன வேளாண்மையில் வெந்தயம் சாகுபடி

பயிர் செய்யும் முறை

வெந்தயம் கலப்பு அல்லது ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். வெந்தயம் லெகுமினஸ் பயிராக இருப்பதால் இதனை கலப்புப் பயிராக பெருஞ்சீரகம், கொத்தமல்லி, ஓமவல்லி, தில் மற்றும் குளிர்கால காய்கறிப் பயிர்களில் பயிர் செய்யலாம். மேலும் இவற்றில் வெந்தயம் முதன்மை பயிராக கருதப்படுகிறது.

வெந்தயம் சாகுபடியில் கீழ்கண்ட பயிர் சுழற்சி முறையை கடைபிடிக்கலாம்.

1. மக்காசோளம், கம்பு
2. எள்ளு
3. எள், வெந்தயம்
4. வெந்தயம் கோடைகால மக்காசோளம் ஆகிய முறைகளை கடைபிடிக்க வேண்டும்.

இரகங்கள்

வெந்தய இரகங்கள் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வெளி யிடப்பட்டுள்ளன. இதனை அதன் மண், தட்பவெப்பநிலை, நோய்கள் மற்றும் பூச்சிகள் தாக்குதலை எதிர்த்து வளரும் தன்மைக்கு ஏற்றார்போல் வெந்தயம் சாகுபடி நெறி முறைப் படுத்தப்படுகிறது. மேலும் பல இரகங்கள் பல இடங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. மேலும் எல்லா இரகங்களும் எல்லா இடத்திலும் சாகுபடி செய்ய ஏற்றதல்ல.

அறுவடை மற்றும் மகசூல்

பொதுவாக வெந்தயச் செடிகள் கீரைக்காக சாகுபடி செய்தால் விதைத்த 20 நாட்களில் முதல் அறுவடை செய்யலாம். அதுவே கரி வகையை சார்ந்த வெந்தயம் என்றால் அறுவடைக்கும் 15-20 நாட்கள் இடைவெளி அவசியமாகும். வெந்தயத்தை இரு போகங் களாக சாகுபடி செய்தால் முதல் அறுவடையினால் விதைகளின் தரம் பாதிக்கப்பட மாட்டாது. வெந்தய கீரையை அறுவடை செய்த பின்பு அதனை கட்டுக்களாக கட்டி சந்தைக்கு அனுப்ப வேண்டும். வெந்தய செடிகளை உரைக் காக வெட்டினால் வெட்டுப்பகுதி பூமியின் இருந்து 3-4 செ.மீ உயரத்திற்கு மேல் வெட்ட வேண்டும். இதே போல் 4 அல்லது 5 முறை வெட்டியபின் செடிகளை வேருடன் பிடுங்கி களைத்து விட வேண்டும் மேலும் இலைகள் கசக்க ஆரம்பித்து விட்டால் அதனை உணவில் பயன்படுத்த முடியாது.

சாதாரணமாக கிராமங்களில் வெந்தயம் பயிர் செய்தால் அதன் நுனிப்பகுதியை கிள்ளி எடுத்து கீரைக்காக பயன்படுத்துவது வழக்கம். இதன் செடிகள் வளர்ந்து பூக்கள் உண்டாகும் வரை நுனிக்கிள்ளுதல் முறையும் கடைப்பிடிக்கப்படுகிறது.

வெந்தயம் பொதுவாக இரகத்தையும் பருவத்தையும் பொருத்து இதன் வாழ்நாட்கள் 80-165 நாட்கள் வரை நீடிக்கிறது. வெந் தயத்தை விதைக்காக அறுவடை செய்யும் போது 70 சதமான காய்கள் பச்சை நிறத்திலுந்து மஞ்சள் நிறமாக மாறும் அப்போது செடிகளை முழுவதுமாக பிடுங்கி அதனை சிறு கட்டுகளா கட்டி வெயிலில் காய வைக்க வேண்டும். பின்பு கட்டுகளை குச்சியால் அடித்து புடைத்து விதைகளை எடுக்கவேண்டும். அவ்விதைகளை வெயிலில் காய வைத்து சாக்கு பைகளில் கட்டி பாதுகாக்க வேண்டும்.

இதன் மகசூல் இரகத்தையும், அந்த பகுதியையும் மற்றும் எந்த பருவத்தில் விதைக்கிறோம் என்பதை பொறுத்தே அமையும். பொதுவாக இரகங்கள் அதிகமான விதை மகசூலையும் குறைவான கீரை மகசூலையும் கொடுக்கவல்லது. இதனை நீர்பாசன முறையில் சாகுபடி செய்தால் கீரைமகசூல் 15-20 கு/ஹெக்டேர் மற்றும் விதை காக அறுவடை செய்தால் 70 கு/ஹெக்டேர் மகசூலாக கிடைக்கும். மேலும் கசூரி வகை வெந்தயம் 80-100 கு /ஹெக்டேர் கீரைகளை மகசூலாக கொடுக்கும். மேலும் அதிக மகசூல் பெற நல்ல சாகுபடி முறை உரிய பருவகாலம் நல்ல இரகங்களை பயன்படுத்தி சாகுபடி செய்ய வேண்டும். சாதாரணமான வெந்தயம் கொடுக்கும் மகசூலை காட்டிலும் கசூரி வகை வெந்தயம் அதிகமான மகசூலை கொடுக்கும்.

சேமித்தல்

வெந்தய இலைகளை அறுவடை செய்தபின் உடனடியாக அதனை விற்று விட வேண்டும் இல்லையென்றால் அழுகிவிடும். மேலும் இலைகளை நன்றாக உலர்த்திய பின்பு இதனை 10-12 மாதங்கள் சேமிக்கலாம். இலைகளை சாராதண அறைகளில் சேமித்தால் 24 மணி நேரம் வரையில் சேமிக்கலாம். அதனை 0ஏ செல்சியஸ் மற்றும் 90-95 சதமானம் ஈரப்பதத்தில் சேமித்தால் 10 நாட்கள் வரை சேமிக்கலாம்.

அறுவடைக்குப்பின் மேலாண்மை

வெந்தயத்தை பச்சை கீரையாகவும், உலர்த்திய கீரையாகவும் மற்றும் விதைகளை பிரித்து சந்தைப்படுத்தப்படுகிறது. வெந் தயத்தை கீரைக்காக வெட்டும் போது அதில் பட்டுள்ள பூச்சி, நோய் தாக்குதல் மற்றும் மஞ்சள் நிறமாக உள்ள இலைகளை களைத்து விட்டு நல்ல செடிகளின் இளந்தண்டுகள் மற்றும் இலைகளை 7-10

செ.மீ அளவில் வெட்டி சிறிய கட்டுக்களாக கட்டி சந்தைப்படுத்த படுகிறது. வருடத்திற்கு சேமிக்க இலைகளை வெயிலில் உலர்த்தியும், நிழலில் உலர்த்தியும் மற்றும் மின்சார உலர்த்தி மூலம் உலர்த்தியும் இதனை இறவை காலங்களில் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறாக வெயிலில் மற்றும் மின்சார உலர்த்தியில் உலர்த்தும் போது இலைகளில் உள்ள பச்சையம் மங்கிவிடுவதால் இலைகளை கொதி தண்ணீரில் (80° செல்சியஸ்) 3-6 நிமிடங்கள் வைத்து காய்ச்சுவதால் பச்சை நிறம் இலைகளுக்கு மீண்டும் கிடைக்கும். மேலும் வெந்தய இலைகளில் பச்சையம் அதனை கொதிக்க வைக்கும் போது அல்லது வருக்கும் போதைவிட நீராவியில் வைக்கும் போது இலைகள் நன்றாக இருக்கும். மேலும் வெந் தயத்தில் வைட்டமின் C 43.00 மி.கி. /100 கிராம் இருக்கும். மேலும் தண்ணீரில் கொதிக்க வைக்கும் போதும் மற்றும் நீராவியில் கொதிக்க வைக்கும் போதும் அல்லது வறுக்கும் போதும் வெந்தய இலைகள் 10.8.1 மற்றும் 74% வைட்டமினை இலைகள் இழக்கின்றது.

வெந்தயத்தின் பயன்கள்

வெந்தயம் உணவுக்காகவும் கால்நடைகளுக்கு தீவனமாகவும், மருத்துவத்திலும் மற்றும் நறுமணத்திற்காகவும் பயன்படுத்தப் படுகிறது. வெந்தயத்தின் பச்சை மற்றும் இளம் காய்களை காய்கறி களாக உணவில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. நன்கு வெயிலில் உலர்த்திய இலைகள் நறுமணமாகவும், வாசனைக்காக உணவில் இறவை காலங்களில் பயன்படுத்தப்படுகிறது. வெந்தயம் நல்ல மணமுள்ளதால் இதனை பொடியாக்கி நறுமணம் மற்றும் மண மூட்டும் பொருளாக மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இதன் விதைகளில் இருந்து கலர் பொருள்கள் மற்றும் வேதிப் பொருள்களை வடித்து பிரித்தல் மூலம் பெறப்படுகிறது. வெந்தயம் டானிக், ஊறுகாய், மிட்டாயகள் மற்றும் வேகவைத்த உணவு தயாரிக்கப் பயன்படுகிறது, மேலும் வெந்தய இலைகள் மற்றும் விதைகள் நறுமணத்திற்காகவும் தலை முடி நரையை கருப்பாக மாற்ற உதவும் பானங்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இது பஞ்சாப் மாநிலத்தில் இதன் காய்ந்த செடிகள் சேமிப்பு கிடங்கில் பூச்சி விரட்டியாக பயன்படுகிறது.

தகவல் : ***T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.***

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

கீரமங்கலத்தில் விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில்நுட்ப செயல்விளக்கம்!

புதுக்கோட்டை, நவ.21

சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் சார்பில், கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சித் திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலத்தில் 17.11.26 அன்று விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் பல்வேறு வேளாண் தொழில்நுட்ப செயல் விளக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன.





ர.சா.சபீன்ராஜ், ர.அபுகுஹாஃபா, செ.நவீன், ர.ச.சொக்கலிங்கம், ம.அருண்குமார் மற்றும் செ.ஸ்ரீ பிரபு ஆகிய மாணவர்கள் இணைந்து இச்செயல்விளக்க நிகழ்ச்சிகளை நடத்தினர். இந்நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு நியூட்ரி சீட் பேக் (Nutri Seed Pack) தொழில்நுட்பம், புரோட்ரே (Pro-tray) நாற்றங்கால் தொழில்நுட்பம், 3G கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடு, துளசி இலைக் கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடு, உளுந்து விதை நேர்த்தி மற்றும் வேப்பம் பிண்ணாக்கு மூலம் விதை உருண்டையாக்குதல் (Seed Pelleting) ஆகிய தொழில் நுட்பங்கள் செயல்விளக்கத்துடன் எடுத்துரைக்கப்பட்டன.

நியூட்ரி சீட் பேக் தொழில்நுட்பத்தின் மூலம் விதைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளை வழங்கும் முறைகளும், புரோ ட்ரே தொழில்நுட்பத்தின் மூலம் குறைந்த இடத்தில் தரமான நாற்றுகளை உற்பத்தி செய்யும் முறைகளும் விளக்கப்பட்டன. மேலும், 3ஜி கரைசல் மற்றும் துளசி இலைக் கரைசல் தயாரிக்கும் முறைகள், அவற்றின் பயன்பாடுகள் மற்றும் இயற்கை முறையில் பயிர்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்குச் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. உளுந்து விதைகளை வேப்பம் பிண்ணாக்குப் பொடியைப் பயன்படுத்தி விதை உருண்டையாக்கும் முறையும், அதன் மூலம் விதைப்பதற்கு முன் விதைகளைத் தயார்படுத்தும் தொழில்நுட்பமும் விளக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகளுக்கு எளிய, குறைந்த செலவிலான மற்றும் பயனுள்ள வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த நடைமுறைப் பயிற்சி வழங்கப்பட்டது.

வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை பயிற்சி

நாமக்கல், நவ.21

நாமக்கல் மாவட்டம், எலச்சிப்பாளையம் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயமாலா, துணை வேளாண்மை உதவி இயக்குநர் சிவகுமார், வைத்தியலிங்கம் (தோட்டக்கலை துறை Rtd), துறை சார்ந்த மானியத் திட்டங்கள் பற்றி கூறினார்கள். இப்பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் திவாகர், வட்டார தொழில்நுட்ப துணை மேலாளர் வாசுகி மற்றும் தமிழ்ச்செல்வன் விவசாயிகளுக்கு அட்மா திட்டம் பற்றி கூறினார். இந்த பயிற்சியில் வேளாண் கல்லூரி மாணவர்கள் ஆதிகேசவன், அருள்முருகன், அழகுராஜ், தேவநாதன்,

ஹரிஹரசுதன், தினேஷ்வரன், ஜெயந்தன் ஆகியோர் பயிற்சி பெற்றனர். மேலும் இந்த பயிற்சியில் நாற்பதற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.



அட்மா வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த பண்ணையம் (IFS), விவசாயிகளுக்குப் பயிற்சி, செயல் விளக்கம் மற்றும் பிற அரசுத் திட்டங்களின் ஒருங்கிணைப்பு மூலம் நிலையான வருமானத்தை உறுதி செய்கிறது. இந்த முறையில் பயிர் சாகுபடியுடன் கால்நடை வளர்ப்பு, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு மற்றும் மண்புழு உரம் தயாரித்தல் ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டு, பண்ணைக் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுகின்றன. அட்மா திட்டம் இதற்கு நேரடி மானியம் வழங்கா விட்டாலும், பண்ணைப் பள்ளிகள், முன்மாதிரி செயல்விளக்கத் திடல்கள் மற்றும் வெளிமாநிலக் கல்விச் சுற்றுலாக்கள் மூலம் விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப அறிவை வழங்குகிறது. மேலும், தேசிய நிலையான வேளாண்மை இயக்கம் (NMSA) போன்ற திட்டங் களுடன் இணைத்து மானிய உதவிகளைப் பெறவும் உதவுகிறது.

உழவன் செயலி குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டம்!

ஈரோடு, நவ.21

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், தாமரையம்பாளையத்தில் கரூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் ஜஸ்வர்யா ஸ்ரீ கோ, அபர்ணா ச, பவதாரணி இ, புவனேஸ்வரி லெ, புவனேஸ்வரி பொ, பூமிகா வை ச, கோடீ த, தீபவைசாலி க, தர்ஷினி பிரியா ஜெ ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான விழிப்புணர்வுக் கூட்டத்தை நடத்தினர். இக்கூட்டத்தில் தமிழக அரசின் வேளாண் மைத் துறையால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உழவன் செயலி குறித்து விவசாயிகளுக்கு விரிவான விளக்கமளிக்கப்பட்டது. இச்செயலியின் முக்கிய அம்சங்கள், அதன் பயன்பாடுகள் மற்றும் செயலியைப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தும் முறைகள் குறித்து மாணவர்கள் செயல்விளக்கத்துடன் எடுத்துரைத்தனர்.

மேலும், வேளாண் மானியத் திட்டங்கள், பயிர் காப்பீடு, வானிலை நிலவரம், சந்தை விலை விவரங்கள், விதை மற்றும் இடுபொருட்கள் தொடர்பான தகவல்கள் உள்ளிட்ட பல்வேறு வேளாண் சேவைகளை

ஒரே செயலியின் மூலம் விவசாயிகள் எளிதாகப் பெற முடியும் என்பதையும் விளக்கினர். இந்தச் செயலியைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகள் அரசின் வேளாண் திட்டங்களை உடனுக்குடன் அறிந்து கொண்டு, தங்களது வேளாண் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி அதிக பயன் பெற முடியும் என மாணவர்கள் தெரி வித்தனர். இக்கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் உழவன் செயலியின் பயன்பாடுகளை ஆர்வத்துடன் கேட்டறிந்து, அதன் மூலம் தங்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் குறித்துத் தெரிந்து கொண்டனர்.

அன்னவாசல் கிராம விவசாயிகளுக்கு அக்ரி கார்ட் [Agri Cart] செயலி குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி!



திருவாரூர், நவ.21

நாகப்பட்டினம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (Rural Agricultural Work Experience – RAWE) கீழ் குடவாசல் வட்டாரத்தில் தங்கி, இன்று அன்னவாசல் கிராம விவசாயிகளுக்கு அக்ரி கார்ட் (Agri Cart) செயலி குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி அளித்தனர்.

இப்பயிற்சியில், அக்ரி கார்ட் செயலியின் பயன்பாடுகள், சிறப்பம்சங்கள் மற்றும் விவசாயிகளுக்குக் கிடைக்கும் நன்மைகள் குறித்து மாணவர்கள் விரிவாக எடுத்துரைத்தனர். மேலும், வேளாண் இடுபொருட்கள் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான பொருட்களை எளிதாகப் பெறுவதில் இச்செயலியின் பயன்கள் குறித்தும் விளக்கினர்.

தொடர்ந்து, கைப்பேசியில் அக்ரி கார்ட் செயலியை எவ்வாறு பதிவிறக்கம் செய்து நிறுவுவது, அதில் கணக்கை உருவாக்குவது மற்றும் அதன் சேவைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும் செயல்விளக்கம் அளித்தனர்.

இப்பயிற்சி விவசாயிகளிடையே டிஜிட்டல் தொழில்நுட்பப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

கிசான் சாரதி செயலி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்!



திண்டுக்கல், நவ.21

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், நடுமண்டலம் குட்டுப்பட்டி கிராமத்தில் 20.11.26 அன்று விவசாயி களுக்கு நவீன தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் வேளாண் சேவைகள் மற்றும் அரசுத் திட்டங்களை எளிதில் கொண்டு சேர்க்கும் நோக்கில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டு மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் (RAWE) உழவர் செயலி (Uzhavar App) மற்றும் கிசான் சாரதி செயலி (Kisan Sarathi app) குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினார். இதில் விவசாயிகளுக்கு கிசான் சாரதி செயல் பாடுகள், அதன் மூலம் வேளாண் வல்லுநர்களிடம் நேரடியாகத் தொலைபேசி வாயிலாகப் பயிர் சாகுபடி, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, உர மேலாண்மை மற்றும் இதர வேளாண் சந்தேகங்களுக்கு ஆலோசனைகள் பெறும் முறைகள் குறித்து விளக்கப்பட்டது.

மேலும், தமிழ்நாடு அரசின் உழவன் செயலி குறித்தும் அதன் முக்கிய அம்சங்கள் மற்றும் பயன்பாடுகள் குறித்தும் விவசாயி களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இச்செயலியின் மூலம் வேளாண் மானியத் திட்டங்கள், பயிர்க் காப்பீடு, விதை இருப்பு, உர இருப்பு, வேளாண் இயந்திரங்கள் வாடகை மற்றும் இதர வேளாண் சேவைகள் குறித்த தகவல்களைப் பெறும் வழிமுறைகள் விளக்கப்பட்டன.

விவசாயிகள் தங்களின் அன்றாட வேளாண் தேவைகளுக்குத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அரசின் சேவைகளை எளி தாகப் பெற்றுப் பயனடைய வேண்டும் என்பதே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும். இந்நிகழ்ச்சியின் வாயிலாக விவசாயி களிடையே டிஜிட்டல் வேளாண்மை மற்றும் தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஊர் மக்கள் பலர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333